**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**கோயமுத்தூர்மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**

**(14.04.2015முதல் 18.04.2015)**

**அறிக்கைஎண் 28/2015** **தேதி:13.04.2015**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலானபகுதிகளில் பகல்நேரவெப்பநிலை31°செ முதல் 39°செ ஆகவும்,கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 19°செமுதல் 22°செ ஆகவும்,இரவுநேரவெப்பநிலை10°செமுதல்
12°செ ஆகவும்பதிவானது.இரவுநேரவெப்பநிலை24°செ முதல் 29°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில்ஒருசில இடங்களில் மழைகாணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைகோயமுத்தூர்(14.04.2015முதல் 18.04.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன்காணப்படும்.மிதமானதுமுதல் கனமானமழைஎதிர்பார்க்கப்படுகிறது.அதிகபட்சவெப்பநிலை35°செமுதல் 36°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை22°செமுதல் 23°செ ஆகவும்,காலைநேரகாற்றின் ஈரப்பதம் 72முதல் 74சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 50முதல் 52சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. சராசரியாககாற்றின் வேகம் மணிக்கு3கி.மீ முதல் 5கி.மீ அளவுக்குபெரும்பாலும் தென்மேற்குதிசையிலிருந்துவீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14.04.15 | 14 | 35 | 22 | 6 | 74 | 50 | 4 | தென்மேற்கு |
| 15.04.15 | 8 | 35 | 22 | 5 | 72 | 52 | 5 | வடகிழக்கு |
| 16.04.15 | 10 | 35 | 22 | 6 | 74 | 50 | 4 | வடகிழக்கு |
| 17.04.15 | 8 | 36 | 23 | 5 | 72 | 52 | 5 | தென்மேற்கு |
| 18.04.15 | 10 | 36 | 23 | 6 | 74 | 50 | 3 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ கோடைமழையைசேமிக்கும் வகையில் சரிவுக்குகுறுக்காககோடைஉழவு செய்யவும்.
- ✓ மிதமானமழைஎதிர்பார்க்கப்படுவதால் எல்லா இறவை பயிர்களுக்கும் குறிப்பாகதாழ்வானபகுதிகளில் தக்கவடிகால் வசதிசெய்யவும்.
- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்கவாய்ப்புள்ளதால் வாழைமரங்களுக்குமுட்டுகொடுக்கவும்.
- ✓ மழைஎதிர்பார்க்கப்படுவதால் இறவை கம்பு விதைப்பைமேற்கொள்ளலாம். மேலும் விதைகளை 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடுகரைசல் கொண்டுகடினப்படுத்தி (விதைகளை 16 மணிநேரம் ஊரவைத்து, 5 மணிநேரம் நிழலில் உலர்த்தவும்) விதைக்கவும்.
- ✓ கோடைகாலங்களில் பெறப்படும் மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்துவரக்கூடும். எனவேகால் நடைகளைமழைநேரங்களில் மேய்ச்சலுக்குவிடவேண்டாம்.
- ✓ மழைஎதிர்பார்க்கப்படுவதால் கால்நடைமற்றும் கோழிகூடாரங்களின்அருகில் தண்ணீர் தேங்காமல் வடிகால் வசதிசெய்வதன் மூலம் கொசு இனப்பெருக்கத்தைதடுக்கலாம்.

**குறுஞ்செய்தி**

- ✓ கோடைமழையைசேமிக்கும் வகையில் சரிவுக்குகுறுக்காககோடைஉழவு செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**